*2*

# பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் புத்தகங்கள்

*தொடங்குவதற்கு: ப.ஏ. வரலாற்றுப் புத்தகங்கள் பெருமளவும், இலக்கியத்தின் எடுத்துரைப்பு வடிவத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. விளக்கம் அளிப்பவர், வரலாற்றுப் பாடக் கருத்துக்களைப் புரிந்து கொள்வதில் நான்கு பணிப்பொறுப்புக்களையும் எடுத்துரைப்புக்களுக்குத் தாம் விளக்கம் அளிக்கையில் நினைவுகூர வேண்டிய மூன்று விஷயங்களையும் கொண்டுள்ளார். எடுத்துரைப்பு என்பது பழைய ஏற்பாட்டு இலக்கியத்தில் பிரதான வடிவமாக உள்ளது.*

## ஒரு அறிமுகம்

யோசுவா முதல் எஸ்தர் வரையிலான வரலாற்றுப் புத்தகங்கள், இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டிற்குள் பிரவேசித்தது முதல் பழைய ஏற்பாட்டு யுகத்தின் முடிவுக்கு இருநூறு முதல் நானூறு ஆண்டுகளுக்கு முந்திய நாட்கள் வரையிலான காலகட்டம் பற்றிக் கூறுகின்றன. ஒவ்வொரு புத்தகத்திலும் கூறிமுடிக்கப்பட்டுள்ள வரலாற்றுரீதியான காலகட்டத்தின் சுருக்கமான மேல் கண்ணோட்டத்துடன் நாம் தொடங்குவோம்.

*யோசுவா* - பஞ்சாகமத்தில் கூறப்பட்ட வரலாற்றைத் தொடருதல், கானான் நாட்டை வெற்றி கொள்ளுதல் மற்றும் நாட்டைப் பங்கிடுதல் ஆகியவற்றைப் பற்றி யோசுவா விவரிக்கிறார்.

*நியாயாதிபதிகள்* - நியாயாதிபதிகளின் காலம், இஸ்ரவேல் மக்கள் அடிக்கடி தேவனை விட்டுப் புறம்பே சென்று விழுந்த, மற்ற நாடுகளினால் அடக்கு முறைக்கு உட்பட்ட பல நூறு ஆண்டுகளின் காலகட்டமாக இருந்தது.

*ரூத்* - இந்த புத்தகம் நியாயாதிபதிகளின் காலத்தின்போது, ஒரு மோவாபியப் பெண் யூதத்துவத்திற்கு மனம் மாற்றப்பட்டு தாவீதின் முன்னோர்களுடைய பட்டியலின் பாகமானது எவ்வாறு என்று கூறுகிறது.

*1 மற்றும் 2 சாமுவேல்* - இந்தப் புத்தகங்கள் நியாயதிபதிகளின் காலத்தினுடைய முடிவையும் இஸ்ரவேல் இராஜ்யத்தின் தொடக்கத்தையும் பற்றி விவரிக்கின்றன. 1 சாமுவேல் புத்தகம் சவுல் அரசரின் ஆட்சி பற்றி எடுத்துரைக்கையில், 2 சாமுவேல் புத்தகம் தாவீது அரசரின் ஆட்சி பற்றி எடுத்துரைக்கிறது.

*1 மற்றும் 2 இராஜாக்கள்* - 1 இராஜாக்களின் புத்தகம், 2 சாமுவேல் முடிந்த இடத்தில் தொடங்கி, சாலொமோனின் ஆட்சியினுடைய வரலாற்றுடன் தொடங்குகிறது. இந்தப் புத்தகங்கள் இராஜ்யத்தின் பிரிவினை பற்றிக்கூறி, பிரிந்த இராஜ்யத்தின் வரலாற்றை எடுத்துரைக்கிறது, மற்றும் தெற்கு இராஜ்யமான யூதா தன்னில்தானே நிலைநின்றிருந்த காலகட்டத்தைப் பற்றியும்

எடுத்துரைக்கிறது. இரண்டு இராஜாக்களின் புத்தகம், யூதா இராஜ்யத்தின் அழிவு மற்றும் பாபிலோனிய அடிமைத்தளையின் தொடக்கம் ஆகியவற்றுடன் முடிகிறது.

*1 மற்றும் 2 நாளாகமம்* - இந்தப் புத்தகங்களில் சாமுவேல் மற்றும் இராஜாக்களின் புத்தகங்களில் உள்ளதில் இருந்து மாறுபட்ட வலியுறுத்தம் இருந்தாலும், இவைகள் இஸ்ரவேல் மற்றும் யூதா ஆகிய நாடுகளின் வரலாற்றை மறுபடியும் கூறுகின்றன. 1 நாளாகமம் புத்தகம் ஆதாம் வரை சென்றடையும் வம்சவழிகளின் அட்டவணையுடன் தொடங்குகிறது. பின்பு சவுலின் காலத்தில் இருந்து பாபிலோனிய அடிமைத்தனத்தின் காலம் வரையிலும் தேவனுடைய மக்களின் வரலாறு வருகிறது. 2 நாளாகமம் புத்தகம், யூதர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கு அனுமதிக்கும் ஆணைபற்றிய விபரத்துடன் முடிகிறது.

*எஸ்றா* - இந்தப், புத்தகம், பாபிலோனிய அடிமைத் தளையில் இருந்து யூதர்களின் முதல் குழு திரும்பியது பற்றியும், தேவாலயம் கட்டப்பட்டது பற்றியும் எஸ்றாவினால் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றியும் விவரிக்கிறது.

*நெகேமியா* - மக்கள் பாபிலோனில் இருந்து திரும்பிய பின்பு, அவர்கள் எருசலேமின் மதில்களை திரும்பவும் கட்டினர். நெகேமியாவின் புத்தகம், எரேமியாவினால் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றியும் உடன்படிக்கை புதுப்பிக்கப்படுதல் பற்றியும் கூட விவரிக்கிறது.

*எஸ்தர்* - கி.மு. 480ம் ஆண்டுவாக்கில், காட்சியமைவு பெற்ற இந்தப் புத்தகம், ஒரு யூதப்பெண் எவ்வாறு அரசியானாள் மற்றும் பிற்பாடு அழிவிலிருந்து யூதர்களை அவள் எவ்வாறு காப்பாற்ற முடிந்தது என்பவற்றைப் பற்றிக் கூறுகிறது.

ஜோடிப்புத்தகங்கள் ஒவ்வொன்றும் - 1 மற்றும் 2 சாமுவேல், 1 மற்றும் 2 இராஜாக்கள் மற்றும் 1 மற்றும் 2 நாளாகமம் - தொடக்கத்தில் ஒரே புத்தகமாக அமைந்திருந்தன. இன்றைக்கும் எபிரெய வேதாகமத்தில் ஒரு சாமுவேல் புத்தகம், ஒரு இராஜாக்களின் புத்தகம் மற்றும் ஒரு நாளாகமத்தின் புத்தகம் மாத்திரமே உள்ளன. மேலும் எபிரெய வேதாகமத்தில், யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல் மற்றும் இராஜாக்கள் ஆகிய புத்தகங்கள், தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள் மத்தியில், "முந்திய தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள்" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. "வரலாறு" என்று நாம் வகைப்படுத்தும் புத்தகங்களில் எஞ்சியவை, எபிரெய வேத எழுத்துக்களில் "எழுத்துகள்" (*Kethubim*) என்பவற்றின் மத்தியில் காணப்படுகின்றன.

வரலாற்றுப் புத்தகங்கள் உண்மையில், ஒருபகுதி மேற்கவிந்துள்ள இரு வரலாறுகளைக் கொண்டுள்ளன. அவற்றில் ஒன்று முந்திய தீர்க்கதரிசிகளின் புத்தகங்களில் காணப்படுகிறது, இது கானான் நாட்டைக் கைப்பற்றுதலில் தொடங்கி பாபிலோன் அடிமைத்தளையினுள் யூதாவின் நுழைதலுடன் முடிகிறது. மற்றொன்று, நாளாகமங்கள், எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்களில் காணப்படுகிறது, இது (வம்சாவழி அட்டவணைக்குப் பின்பு) தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் கீழ் ஒன்றிணைந்த இராஜ்யத்தில் தொடங்கி யூதர்கள் பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்து திரும்பி வந்ததைக் கொண்டு முடிகிறது. மற்ற இரு புத்தகங்களும், வரலாற்றுப்

*புத்தகங்களில் கூறப்பட்ட வரலாற்றைத் தொடர்ந்து கொண்டுசெல்லவில்லை, ஆனால் அவைகளால் கூறப்பட்ட காலகட்டங்களில் நடந்த நிகழ்வுகளைக் கூறுவதால் அவற்றுடன் இணைக்கப்பட்டவைகளாக உள்ளன: ரூத் புத்தகம் நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்த நிகழ்வுகள் பற்றியதாக உள்ளது, மற்றும் எஸ்தரின் புத்தகத்தில் உள்ள நிகழ்வுகள் எஸ்றா மற்றும் நெகேமியா ஆகிய புத்தகங்களில் விவரிக்கப்பட்ட காலத்தின்போது நடந்தன.*

## பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் புத்தகங்களின் பண்புகள்

***பழைய ஏற்பாட்டு வரலாறு எதைப்போன்றதாக உள்ளது?***

*முதலாவது, பழைய ஏற்பாட்டு வரலாறு, தேர்ந்தெடுக்கப்பட்ட வரலாறாக உள்ளது.* அது ஒவ்வொரு விஷயத்தையும் உள்ளடக்குவதில்லை, ஆனால் எழுத்தாளர்களின் நோக்கங்களை நிறைவேற்ற அவசியமான தகவல்களை மாத்திரம் உள்ளடக்குகிறது. பல்வேறு புத்தகங்கள் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், பொதுவில் இந்த வரலாற்றின் மொத்த நோக்கம் மதரீதியானது அல்லது இறையியல் ரீதியானது என்று கூறப்படலாம். இது, தேவனைப் பற்றியும், அவரது நோக்கம் பற்றியும் அவரது திட்டம் பற்றியும் போதிக்கிறது. ஆகவே அரசியல் அல்லது உலக வரலாற்றில் முக்கியமானவைகளாகக் காணப்படும் விபரங்கள் சேர்க்காமல் விட்டுவிடப் பட்டுள்ளன, அதே வேளையில், தேவனுடைய மக்களுக்கு அதிகம் பொருத்தமானவைகளாக உள்ளவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த மனப்பாங்கிற்கான உதாரணம், கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் வடக்கு இராஜ்யத்தின் அரசராக இருந்த ஓம்ரி என்பவரின் தொடர்பாகக் காணப்படுகிறது. உம்ரி என்பவர் ஒரு வல்லமை நிறைந்த மற்றும் முக்கியமான அரசராக இருந்தார் என்பதை நாம் அருகில் இருந்த நாடுகளின் வரலாற்றில் இருந்து அறிகிறோம். அவரது மரணத்திற்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின்புகூட, அசீரியா நாடு, இஸ்ரவேல் மக்களை “உம்ரியின் வீட்டார்”[1] என்று குறிப்பிட்டது. இருப்பினும் அவரது ஆட்சிக்கு வேதாகம எழுத்தாளர் ஒரு சில வசனங்களையே அர்ப்பணித்தார் (1 இராஜாக்கள் 16:16-28). ஏன்? அவர் ஒரு பொல்லாத அரசராக இருந்து, எழுத்தாளரின் நிலைப்பாட்டில், தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதில் மதிப்பிற்குரிய எதையும் பங்களிக்கவில்லை என்று நாம் முடிவு செய்தாக வேண்டும். அவர் உலகப்பிரகாரமான நிலைப்பாட்டில் முக்கியமானவராக இருந்தார், ஆனால் 1 மற்றும் 2 இராஜாக்கள் புத்தகங்களின் எழுத்தாளர் மதரீதியான கவனக் குவிப்பைக் கொண்டிருந்த காரணத்தினால், அவருடைய நிலைப்பாட்டில், இந்த அரசர் சார்பளவில் முக்கியமற்றவராக இருந்தார்.

வேதாகம வரலாறு (நடந்த நிகழ்வுகளில் இருந்து தேவையானவற்றைத்) தேர்ந்தெடுத்து எழுதப்பட்டதாக இருக்கிறது என்றால், அது ஏதோ ஒருவகையில் குறைபாடு உடையதாக உள்ளதா? அது வரலாற்று ரீதியாக இருப்பதற்கு மாறாக, மிகவும் அக உணர்வுக் கோட்பாடு உடையதாக அல்லது பெரிதும் புராணச் சார்பானதாகக்கூட உள்ளதா? இல்லவே இல்லை. உண்மையில் வேதாகம

வரலாற்று எழுத்து (அல்லது வரலாற்று அளவு) பற்றிக் கூறப்பட்டுள்ளதை எந்த ஒரு வரலாற்று எழுத்திற்கும் கூறப்படவும் முடியும்: அது (நடந்த நிகழ்வுகளில் இருந்து தேவையானவற்றைத்) தேர்ந்தெடுத்து எழுதப்பட்டதாக உள்ளது. எந்த ஒரு வரலாற்றுப் பதிவிலும் ஒவ்வொரு உண்மையும் உள்ளடக்கப்பட இயலாது என்பதால் வரலாற்று எழுத்து என்பது (நடந்த நிகழ்வுகளில் இருந்து தேவையானவற்றைத்) தேர்ந்தெடுத்து எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். வரலாற்றை எழுதுவதில், "தேர்ந்தெடுத்தல்" என்பதன் கொள்கை உள்ளடங்குகிறது என்று ஒப்புக்கொள்ளப்பட்ட உடனே, எழுத்தாளரின் நோக்கமும் முக்கியமானதாக ஆகிறது; ஏனெனில் அந்த நோக்கம்தான் எப்போதுமே, வரலாற்றில் உள்ளடக்கப்படும்படி தேர்ந்துகொள்ளப்படுவது என்ன என்பதைத் தீர்மானிக்கும். வேதாகமத்தில் காணப்படும் வரலாற்று எழுத்தானது, அதன் தேர்ந்தெடுத்தலுக்குப் பின்னால் உள்ள வேறுபட்ட நோக்கத்தில் மாத்திரமே உலக வரலாற்று எழுத்தில் இருந்து வேறுபடுகிறது.

*இரண்டாவது, பழைய ஏற்பாட்டு வரலாறு நம்பகமான வரலாறாக உள்ளது.* வேதாகம வரலாற்றாளரின் நோக்கமும் நவீன வரலாற்றாளரின் நோக்கமும் ஒன்றுபடுவதில்லை என்பதால், அறியப்பட்ட வரலாற்று உண்மைகளின்படி வேதாகம வரலாற்றை உண்மையென்று நிரூபித்தல், எப்போதுமே சாத்தியமாக இருப்பதில்லை. சட்டப்படி நாம், பழங்கால வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டு அற்புதங்களை உண்மையென்று நிரூபிக்கும்படி எதிர்பார்க்கக் கூடாது. இருப்பினும், வேதாகம வரலாறு அறியப்பட்ட உண்மைகளைக் கொண்டு சோதிக்கப்படும் நிலைகளில், வேதாகம வரலாற்று விபரங்கள் மீண்டும் மீண்டும் மிகச்சரியானவைகள் என்று நிரூபிக்கப்படுகின்றன.

*மூன்றாவது, பழைய ஏற்பாட்டில் காணப்படும் வரலாறு நன்கு எழுதப்பட்ட வரலாறாக உள்ளது.* (அ) மற்ற நாடுகளில் இருந்த சமகாலத்திய அரசர்களின் வரலாற்றுக் குறிப்புகளுக்கு நேர்மாறான வகையில், இது (வேதாகமம்) நிகழ்வுகளின் காரணங்கள் மற்றும் விளைவுகளைக் கையாளுகிறது. (ஆ) பழங்கால அண்மைக் கிழக்கு நாடுகளின் அரசர்கள் பற்றிய தற்பெருமையான விபரங்களுக்கு நேர்மாறாக, இந்த வரலாறு தனது முக்கியப் பாத்திரங்களின் பலவீனங்களை அறிக்கை இடுவதில் மிகவும் நேர்மையானதாக உள்ளது. (இ) இது விபரத்தில் வளம் மிக்கதாகவும் வாழ்விற்கு உண்மையுள்ளதாகவும் இருக்கிறது.

## ப.ஏ. வரலாற்றிற்கு விளக்கம் அளித்தல்

பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகங்களில் உள்ள பாடக்கருத்தைப் பொறுத்த மட்டில், விளக்கம் அளிப்பவர்கள் நான்கு பணிப்பொறுப்புகளைக் கொண்டுள்ளனர்:

1. *நிகழ்வுகள் அல்லது எடுத்துரைப்புகளை, விசேஷமாக வேதாகமத்தில் எடுத்துரைக்கப்பட்ட இஸ்ரவேல் மக்களின் வரலாறு என்ற வகையில் அவற்றை,* வரலாற்றுச் சந்தர்ப்பப் பொருளில் அமைத்தல். அது எப்போது நடைபெற்றது? அதற்கு முன்பு வந்து அதை வழிநடத்தியது என்ன? அதற்குக் காரணமானது என்ன? அதன்பின்பு வந்தது என்ன? இந்த நிகழ்வின் முடிவுகள் அல்லது விளைவுகள் என்னவாக இருந்தன? நாம் எப்போதுமே, வேதாகம எடுத்துரைப்புகளை ஒரு "வரலாற்று மட்டத்தில்" புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது. நிகழ்வுகள் ஏதோ காரணத்தினால் விளைந்தன மற்றும்

அவை பின் விளைவுகளைக் கொண்டிருந்தன. வேதாகம வரலாற்றை அதன் சொந்த நிபந்தனைகளில் எடுத்துக்கொள்ளும்போது அது கருத்துணர்வை ஏற்படுத்துகிறது.

2. *ஒரு நிகழ்வு உண்மையிலேயே நடைபெற்றதா இல்லையா என்று கேட்டல்.* நம்மில், வேதவசனங்கள் பற்றிய பழைமைவாதக் கண்ணோட்டத்தைப் பற்றிக்கொண்டுள்ளவர்கள், இப்படிப்பட்ட கேள்வி தேவை என்று நினைக்காது இருக்கலாம், ஏனெனில் வேதாகமத்தை ஏவுதல் பெற்ற வரலாற்றுப் பதிவேடு என்று நாம் ஒப்புக்கொள்கிறோம். ஒரு விஷயம் நடந்தது என்று வேதாகமம் கூறுகிறது என்றால், அது நடந்திருந்தது என்று நாம் நம்புகிறோம். இருப்பினும் இரு காரணங்களுக்காக, ஒரு குறிப்பிட்ட நிகழ்வின் வரலாற்றுரீதியான நம்பகத்தன்மையை நாம் இன்னும் நெருக்கமாகக் கண்ணோக்குதல் அவசியமாக இருக்கலாம். முதலாவது, அதன் வரலாற்றுப் பண்பைச் சிலர் மறுத்திருக்கலாம். அவ்வாறு இருந்தது என்றால், அவர்களின் மறுப்பானது விசுவாசிகளிடம் இருந்து ஒரு பதிலை நிச்சயமாகவே வேண்டுகிறது. இரண்டாவது, வேதாகமத்தினுள் இருக்கும் சிரமங்கள், ஒரு குறிப்பிட்ட நிகழ்வு பற்றிக் கேள்விகளை எழுப்பலாம். விபரமானது தன்னிலேயே நேர்மாறாக இருப்பதாகக் காணப்படலாம் அல்லது அது வேதாகமத்தின் மற்ற வசனப்பகுதிகளுக்கு நேர்மாறானதாக இருப்பதாகக் காணப்படலாம். நேர்மாறு என்று உறுதியாகக் காணப்படும் விஷயம் மேலும் படிப்பதற்கு நம்மை வேண்டுகிறது. ஒரு குறிப்பிட்ட நிகழ்வை, வேதாகமத்திற்குப் புறம்பே உள்ள அறியப்பட்ட ஆதாரமூலங்களின் உண்மைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அதன் வரலாற்றுத் தன்மையை நிலைநாட்டுதல் உதவுகிறது என்பது ஒரு அணுகுமுறையாக உள்ளது.

3. *ஒரு நிகழ்வை அதன் சொந்த வரலாற்று, சமூக மற்றும் கலாச்சாரச் சந்தர்ப்பப் பொருளில் புரிந்துகொள்ளுதல்.* என்ன நடந்தது. எவ்வாறு நடந்தது, எப்போது, எங்கே மற்றும் ஏன் அது நடந்தது என்பதைச் சாத்தியமான அளவுக்கு - நமது சொந்தக் காலத்தின் வகையில் அல்ல ஆனால், அந்த நிகழ்வின் காலம் மற்றும் இடம் ஆகியவற்றின் வகையில் - நாம் அறிவது அவசியமாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட நிகழ்வுக்கான பகுத்தறிதல் நமக்கு தர்க்கப்பொருத்தமாகக் காணப்படாது இருக்கலாம். ஆனால் அது நடைபெற்ற காலத்தில் இருந்த மக்களின் வரலாற்று மற்றும் கலாச்சாரச் சூழ்நிலைகளில் அது பூரணமாகத் தர்க்கப் பொருத்தமாக இருந்திருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, கோலியாத்துடன் தாவீது செய்த யுத்தம் (1 சாமுவேல் 17:2-51) இன்றைய நாட்களின் உலகத்தில் அதிகக் கருத்துணர்வை ஏற்படுத்தாது இருக்கலாம். இரு தனிநபர்களுக்கு இடையிலான யுத்தத்தில் வெற்றிபெறுபவர் அவர்களுக்கு இடையிலான போராட்டத்தின் விளைவைத் தீர்மானிப்பார் என்று நவீனகாலப் படைகள் ஒப்புக்கொள்வதை நாம் கற்பனை செய்ய இயலாது. இருப்பினும் அந்த எதிர்கொள்ளுதல் கிரேக்க வரலாற்றின் இணைநிகழ்வுகளைக் கொண்டுள்ளது.[2] இரு படைகளின் முதன்மை வீரர்கள் ஒருவர் மற்றவருடன் போரிடுவார்கள்; வெற்றியாளரின் வெற்றி அவருடையதாக மாத்திரம் இராமல், அவரது படை மற்றும் அவரது நாட்டிற்கு உரியதாக இருக்கும். தோல்வியுற்றவரின் சகவீரர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு சரணடைய வேண்டியவர்களாக இருப்பார்கள். கோலியாத் பெலிஸ்தர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினார், அந்த கோலியாத் கிரேக்கத்தில் (அல்லது அதற்கு

அருகாமையில் இருந்த ஏதோ ஒரு பகுதியில்) இருந்து பெலிஸ்தரின் நாட்டிற்குள் வந்தவராக இருந்தார்.

தேவனுடைய வார்த்தைக்கு விளக்கம் அளிப்பவர்கள் என்ற வகையில் நாம், எச்சரிக்கை நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். வேதாகமத்தில் பேசப்பட்டுள்ள ஒரு வரலாற்று நிகழ்வைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அறியப்படக் கூடியவைகள் யாவை மற்றும் அறியப்பட இயலாதவைகள் யாவை என்பதை நாம் வித்தியாசப்படுத்த வேண்டும். ஒரு நிகழ்வைப் பற்றி சாத்தியமான அல்லது நிகழ்தகவான வகையில் உண்மை எது மற்றும் அதைப் பற்றிய நிச்சயமானது எது என்பவற்றிற்கு இடையில் நாம் எச்சரிக்கை நிறைந்தவகையில் வித்தியாசப்படுத்த வேண்டும்.

4. *எழுதப்பட்டவைகளின் அர்த்தம், தனிச்சிறப்பு ஆகியவற்றை நாடுதல்.* வேதாகம வரலாற்றாளர்கள் தங்கள் வரலாற்றை அதன் சொந்த நோக்கத்திற்காக எழுதுவதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை; அவர்கள் பதிவு செய்த வரலாற்றின் வழியாகச் சில விஷயங்களைப் போதிப்பதில் அவர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர். விளக்கம் அளிப்பவர்கள் என்ற வகையில், "இந்த நிகழ்வின் வழியாக, எழுத்தாளர் போதிக்க முயன்றது என்ன?"; "அவர் தமது வரலாற்றில் இந்தக் குறிப்பிட்ட நிகழ்வை உள்ளடக்கியது ஏன்?" என்று கேட்பது நமது பணிப்பொறுப்பாக உள்ளது.

ஒரு சுருக்கமான உதாரணம் என்ற வகையில் நாம், தாவீது மற்றும் கோலியாத் ஆகியோரின் வரலாற்றிற்குத் திரும்புவோமாக. இந்த வரலாறு வரலாற்றுப் பூர்வமானது, வேதாகமம் கூறுவது உண்மையாகவே நடைபெற்றிருந்தது என்று யூகிப்பதன் மூலம் நாம் இதைத் தொடங்குகிறோம். இந்த வசனப்பகுதிக்கு விளக்கம் அளிக்கத் தொடங்குகையில் நாம் பதில் அளிக்க வேண்டிய கேள்விகள் யாவை?

1. *நடந்தது என்ன?* தாவீது - இஸ்ரவேல் மக்களை ஆளவிருக்கும் அடுத்த அரசராக சாமுவேல் தீர்க்கதரிசியால் அபிஷேகம் பண்ணப்பட்டவரான, ஆடுமேய்த்த ஒரு இளைஞர், ஆனால் இவர் யுத்தத்தில் அனுபவமற்றவராக இருந்தார் - பெலிஸ்த இராட்சதரான கோலியாத்தைத் தோல்வியடைய செய்தார். இதன் விளைவாக, (அ) பெலிஸ்தர்கள் மேல் இஸ்ரவேல் மக்கள் வெற்றி பெற்றனர் மற்றும் (ஆ) தாவீது மக்களால் மிக உயர்வாகப் புகழப்பட்டார்.

2. *இந்த வரலாற்றின் வரலாற்றுரீதியான தனிச்சிறப்பு என்ன?* கோலியாத்தின் மீது தாவீதின் வெற்றியானது, தாவீதைக் குறித்துப் பொறாமை கொள்ளும்படி சவுலை வழிநடத்திற்று, அது சவுல் மற்றும் தாவீது ஆகியோரின் வரலாற்றில் பின்தொடர்ந்த செயல்களில் பெரும்பான்மையானவற்றைத் தூண்டிவிட்டது. இருப்பினும், இந்த மாபெரும் வெற்றியும் விசுவாசத்தின் செயல்விளக்கமும், பின்தொடர்ந்த ஆண்டுகளில் மக்கள் தாவீதைத் தங்கள் அரசராக ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை ஆயத்தம் செய்தது.

3. *இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?* எழுத்தாளர் எதை வலியுறுத்தினார்? ஒரு கவண் கொண்டு தாவீது தன்னை ஆயத்தப்படுத்தியது மற்றும் அவரது வீரம் மற்றும் திறன் ஆகியவற்றிற்காக நாம் அவரைப் புகழும் அதே வேளையில், எழுத்தாளர் இந்த வரலாற்றில் *தேவனுடைய* பங்கை வலியுறுத்தினார். தாவீது தேவன்மீது நம்பிக்கை வைத்ததால் மற்றும் தேவன் அவருடன் இருந்ததால் வெற்றிபெற்றார்! இந்த எடுத்துரைப்பில் தேவனே

*நடுநாயகமாக இருக்கிறார்.*

## ப.ஏ. வரலாற்று எடுத்துரைப்புகளின் அர்த்தத்தைக் கண்டறிதல்

*நிறைவாக, வேதவாக்கியங்களுக்கு நாம் விளக்கம் அளிக்கையில், வரலாற்றுப் புத்தகங்கள் ஒன்றிலோ அல்லது பழைய ஏற்பாட்டின் வேறு இடங்களிலோ காணப்படும் ஒரு எடுத்துரைப்பின் அர்த்தத்தை நாம் எவ்வாறு கண்டறிய முடியும்? நாம் பின்பற்றக் கூடிய சில ஆலோசனைகள் இங்கு வழங்கப்படுகின்றன.*

### *1. எடுத்துரைப்புகள் யாவை என்று அடையாளம் காணுங்கள்*

*எடுத்துரைப்புகள் உள்ளபடியே விளக்கம் அளிக்கப்பட வேண்டும். எடுத்துரைப்புகள் அல்லது வரலாறுகள் என்பவை பழைய ஏற்பாட்டில் மிகப்பொதுவாகக் காணப்படும் இலக்கிய வகையாக உள்ளன. எடுத்துரைப்புகள் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகின்றன என்றாலும், பழைய ஏற்பாட்டில் வரலாற்றுப் புத்தகங்கள், எடுத்துரைப்பின் மாபெரும் களஞ்சியமாக உள்ளன.*

*எடுத்துரைப்பு என்பது ஒரு வரலாறாக இருப்பதால், நாம் அந்த வரலாற்றைப் புரிந்துகொள்ள நாட வேண்டும். முதன்மைப் பாத்திரங்கள் - நாயகன் மற்றும் நாயகனுக்குப் பகைஞன் - யார்? வரலாற்றின் உயிர்நாடிப்பகுதி, அதன் வடிவமைப்பு என்ன? ஒரு வரலாறு என்பது ஒரு தொடக்கம், ஒரு நடுப்பகுதி மற்றும் ஒரு முடிவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தொடக்கத்தில் பாத்திரங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றனர் மற்றும் ஒரு பிரச்சனை முன்வைக்கப்படுகிறது; நடுப்பகுதியில், சிக்கல்கள் எழுகின்றன மற்றும் அவை, நாயகரால் மேற்கொள்ளப் படுகின்றன, முடிவில் பிரச்சனை தீர்த்து வைக்கப்படுகிறது.*

*எடுத்துரைப்பின் அர்த்தம் அல்லது தனிச்சிறப்பு என்பது வரலாற்றில் வலியுறுத்தப்படும் விஷயத்தின் மூலம் தெளிவாகிறது. சிலவேளைகளில், வரலாற்றிற்கு முந்திய ஒரு முகவுரையிலோ அல்லது அதை முடித்துவைக்கும் ஒரு தொகுப்புரையிலோ, எடுத்துரைப்பாளரால் தரப்படும் ஒரு விளக்கமானது வலியுறுத்தத்தைக் சுட்டிக்காண்பிக்கிறது. சிலவேளைகளில் எடுத்துரைப்பு எதைப் பற்றியது என்பதை, திரும்பத் திரும்பக் கூறப்படும் வார்த்தைகள் முக்கியத்துவப் படுத்துகின்றன. பொதுவாக, எழுத்தாளர் தமது வாசகர்கள் எதைக் கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை கவனம் நிறைந்த வகையில் வாசிப்பதன் மூலம் நாம் காண முடியும்.*

*எடுத்துக்காட்டாக, ரூத்தின் சரித்திரம் என்ற புத்தகமானது, அழகிய காதல் வரலாறு ஒன்றைக் கூறுகிறது - ஆனால் அதன் தனிச்சிறப்பு என்ன? ரூத்தின் சரித்திரம் வேதாகமத்தில் உள்ளடக்கப்படும் அளவுக்கு முக்கியமாக இருப்பது ஏன்? முதலாவது இது, மோவாபியப் பெண் ஒருத்தி, தாவீது அரசரின் முன்னோர்களில் ஒருத்தியாக (இதனால் மேசியாவின் முன்னோர்களில் ஒருத்தியாகவும் ஆனாள்; மத்தேயு 1:5ல், கிறிஸ்துவின் வம்சவழியில் ரூத் பட்டியல் இடப்பட்டு இருக்கிறாள்) ஆனது எவ்வாறு என்று கூறுகிறது. இந்தப் புத்தகம், இஸ்ரவேல் மக்களுடன் புறஜாதியாரின் உறவு பற்றிய*

சிலவிஷயங்களையும் வெளிப்படுத்துகிறது, இது புறஜாதியில் இருந்த எல்லாரும் யூதர்களுக்குப் பகைஞர்களாக இருக்கவில்லை என்று காண்பிக்கிறது. சில வேளைகளில் புற ஜாதியார் யூதர்களைத் திருமணம் செய்து கொண்டனர் மற்றும் அவர்கள் யூதமார்க்கத்தைத் தழுவியும் இருந்தனர். இத்துடன் கூடுதலாக, இந்த எடுத்துரைப்பைக் கவனநிறைவுடன் வாசித்தல், ரூத்தின் மாமியாரான நகோமி, மோவாபிய நாட்டில் - தனது இல்லம், தனது கணவர், தனது வாழ்வாதாரம் மற்றும் தனது மகன்கள் ஆகிய - எல்லாவற்றையும் இழந்துபோனாள், ஆனால் அவள் இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பி வந்தபோது எல்லாவற்றையும் (மற்றும் அதிகமானவற்றையும்) திரும்பவும் ஆதாயமாக்கிக் கொண்டாள் என்பதை வெளிப்படுத்துகிறது. எனவே இதன் ஆய்வுக்கருத்து பின்வருவது போன்று சொல்லாக்கப்பட முடியும்: "தேவன் எடுத்துக் கொண்டதை [ரூத் 1:21], தேவன் வட்டியுடன் திரும்ப ஒப்படைக்கிறார்."

### *2. எடுத்துரைப்புகள் என்னவாக இருப்பதில்லை என்று அடையாளம் காணுங்கள்*

எடுத்துரைப்புகள் தவறான யூகங்களுடன் அணுகப்படக் கூடாது. நாம் எச்சரிக்கை அற்றவர்களாக இருந்தால், விளக்கம் அளிப்பதில் நாம் தீவிரமான தவறுகளைச் செய்துவிடக்கூடும்.

*எடுத்துரைப்பு என்பது சொந்த அர்த்தத்தைக் கொண்டுள்ள விபரங்களின் தொகுப்பாக இருப்பதில்லை.* வேதாகம வரலாறு ஒன்றில் உள்ள விபரங்கள் முக்கியமானவையாக இல்லாதிருக்கலாம்; அவைகள் எதையும் "அர்த்தப்படுத்தாமல்" இருக்கலாம். கோலியாத்துடன் சண்டையிடச் சென்ற தாவீது வழுவழுப்பான ஐந்து கூழாங்கற்களைத் தேர்ந்து எடுத்துக்கொண்டார் என்ற உண்மை போன்ற குறிப்புகளை வேதவசனங்களில் உள்ளடக்குதல் மூலம் நமக்கு எதையாவது போதிக்கத் தேவன் விருப்புநோக்கங் கொண்டிருக்க அவசியமில்லை.

*பழைய ஏற்பாட்டு எடுத்துரைப்பு ஒரு பிரமாணமாக இருப்பதில்லை, அல்லது அது கிறிஸ்தவர்களால் இன்றைய நாட்களில் பின்பற்றப்பட வேண்டிய ஒரு முன்னுதாரணத்தை எப்போதுமே அமைப்பதில்லை.* கிதியோன் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே விரித்தார் என்ற உண்மையானது (நியாயாதிபதிகள் 6:36-40), இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தைக் கண்டறிய, அதைப்போன்ற எதையாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதில்லை அல்லது அவ்வாறு செய்ய வேண்டும் என்று அதிகாரம் அளிப்பதில்லை.

*பழைய ஏற்பாட்டு எடுத்துரைப்பு நல்லதொரு ஒழுக்க நெறியை அல்லது ஒழுக்கநெறி வழிகாட்டியை அளிக்காதிருக்கலாம்.* எடுத்துரைப்புகள், ஒழுக்க நெறிகளைச் செயல்விளக்கப்படுத்துவதைவிட, மற்ற நோக்கங்களைக் கொண்டுள்ளன. வழக்கமாக வேதாகம வசனப்பகுதிகள் அதன் வரலாறுகளில் உள்ள பாத்திரங்களின் செயல்பாடுகள் மீது முடிவு கூறுவதில்லை. கூறப்படும் வரலாறுகளில் உள்ள மக்களின் செயல்பாடுகள் ஒழுக்கரீதியானவைகளாக இருந்தனவா இல்லையா என்பதை, வாசகர் - சட்டத்தின் கோட்பாடுகளைப் பயன்படுத்தி - முடிவு செய்யக் கூடியவராக இருக்க வேண்டும். இஸ்ரவேல் மக்களின் வரலாற்றைக் கூறுதல், மற்றும் விசேஷமாகத் தேவன் தமது

நோக்கங்களை நிறைவேற்ற, மனிதர்களின் வாழ்வில் அவர் எவ்வாறு செயல்பட்டார் என்பதை வெளிப்படுத்துவதே, எடுத்துரைப்புப் பகுதிகளின் இலக்காக உள்ளது. இதன் விளைவாக நாம், வேதாகமப் பாத்திரங்களின் செயல்பாடுகள் - வேதாகம "நாயகர்களின்" செயல்பாடுகள் கூட - அந்தச் செயல்பாடுகளை வேதாகமம் கண்டனம்பண்ணவில்லை என்பதால் அவைகள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவைகளாக உள்ளன என்று யூகிக்க முடியாது.

*வேதாகம எடுத்துரைப்பு என்பது "மிகவும் ஆழமான அர்த்தம்" கொண்ட வரலாறாக இருப்பதில்லை.* பழங்காலத்தில் இருந்தே, விளக்கம் அளிப்பவர்கள், வேதாகமம் பொதுவானது என்றும் குறிப்பாக வேதாகம வரலாறுகள் மேல்மட்டத்தில் உள்ளவற்றைக் காட்டிலும் அதிக ஆழமான ஆவிக்குரிய அர்த்தங்களைக் கொண்டுள்ளன என்றும் யூகித்துள்ளனர். பழைய ஏற்பாட்டு எடுத்துரைப்புகளை இந்த அணுகுமுறையுடன் வாசித்தலில் இரண்டு பிரச்சனைகள் உள்ளன. (1) ஒரு வரலாற்றின் "ஆவிக்குரிய" அர்த்தத்தைத் தேடுதல் என்பது, அவ்வசனத்தில் காணப்படும் தனிச்சிறப்பை, தெளிவான அர்த்தத்தை வாசகர்கள் தவறவிடச்செய்ய வாய்ப்பளிக்கிறது. (2) "மிகவும் ஆழமான" அர்த்தத்தை நாடுபவர்கள் வழக்கமாகத் தாங்கள் எதைக் காணவிரும்புகிறார்களோ அதைக் கண்டறிவார்கள்; உண்மையில் மக்கள், இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி, வேதாகமத்தில் உள்ள எந்த ஒரு வசனமும் எதை அர்த்தப்படுத்த வேண்டும் என்று தாங்கள் விரும்புகின்றனரோ, அதை அர்த்தப்படுத்தச் செய்ய முடியும்.

*வேதாகம எடுத்துரைப்பு ஒரு உருவகத்தை அல்ல.* பழைய ஏற்பாட்டு வரலாறுகளில் இருந்து கற்றுக்கொள்ளப்படக்கூடிய "பாடங்களில்" திருப்தி அடையாத விளக்கவுரையாளர்கள், சில வேளைகளில் அந்த வரலாறுகளை உருவகக் கதைகளாகத் திருப்புகின்றனர். இருப்பினும் வேதாகமம் தானே உருவகக்கதைகளை[3] புனையாதவரையில், வேதாகம எடுத்துரைப்புகளை உருவகக்கதைகளாக நடத்துதல் என்பதில் நியாயம் எதுவும் இருப்பதில்லை.

### 3. "நிரூபணம்" மற்றும் "விவரணம்" ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசம் ஏற்படுத்துதல்

*வேதாகமத்தில் உள்ள சில வரலாறுகள் முக்கியமான சத்தியங்களை நிரூபிக்கையில், மற்றவைகள் விவரணங்களாகப் பயன்படுத்தப்பட முடியும்.* கோலியாத்துடன் போரிடத் தாவீது கொண்டிருந்த விருப்பம், இளைஞர்கள் ஆயத்தமாக இருப்பதன் அவசியத்தை *விவரிக்கலாம்* - ஆனால் அது, தேவனுடைய உதவியுடன், தாவீது இராட்சதனை எதிர்த்துப் போரிடக்கூடியவராக இருந்து வெற்றிபெற்றார் என்பதைத் தவிர வேறு எதையும் *நிரூபிப்பதில்லை. பொதுவாகக் கூறுவதென்றால், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் ஒரு நிரூபணம் என்ற வகையில் பயன்படுத்தப்படாத வரையில், எடுத்துரைப்புகள் எந்த ஒரு விஷயத்தையும் நிரூபிக்க முயற்சிசெய்வதில் பயன்படுத்தப்படக் கூடாது.*

ஆகவே, வேதாகம எடுத்துரைப்புகள் மீது பிரசங்கிக்கும் ஒருவர், "தாவீதின் அனுபவம், நீங்கள் உங்கள் வாழ்வில் 'இராட்சதர்களை' தோல்வியடையச் செய்ய முடியும் என்று நிரூபிக்கிறது" என்பது போன்ற கூற்றுக்களை ஏற்படுத்தாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதற்குப்பதிலாக அவர், "தாவீதின் அனுபவம்,

தேவனுடைய உதவியுடன் நீங்கள், தேவனுடைய மக்களை எதிர்க்கும் 'இராட்சதர்களை' மேற்கொள்ள முடியும் என்று விவரிக்கிறது (அல்லது "கருத்துத் தெரிவிக்கிறது")" என்று கூறலாம். புதிய ஏற்பாட்டில் கண்டறிதல் என்பதைச் செய்ய வேண்டும் என்றே கிறிஸ்தவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள், நமது பொறுப்புகளையும் சிலாக்கியங்களையும் தெளிவாக்கி இருக்கலாம் என்றிருக்கையில், அவைகள் - புதிய ஏற்பாட்டில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் - நாம் செய்ய வேண்டியவற்றைத் தாங்களே நிலைநாட்டுவதில்லை.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் நாடு "மலைகளையும் பள்ளத்தாக்குகளையும்" கொண்டிருக்கும் என்று தேவன் கூறினார் என்று ஒரு பிரசங்கியார் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர், "அவ்வாறே நமது வாழ்வும் 'மலைகளையும் பள்ளத்தாக்குகளையும்' உயர்வுகளையும் தாழ்வுகளையும், நல்ல நேரங்களையும் மோசமான நேரங்களையும் கொண்டிருக்கும்" என்று கூறினார். கிறிஸ்தவர்கள் உயர்வுகளையும் தாழ்வுகளையும் அனுபவிக்கின்றனர்; இருப்பினும் இந்த உண்மையை (உபாகமம் 8:7) நிரூபிப்பதில்லை. அது எதையும் நிரூபிப்பதில்லை; அது இஸ்ரவேல் மக்கள் சுதந்தரித்துக் கொள்ளவிருந்த நாட்டின் தன்மையை விவரித்தல் என்பதை மாத்திரம் செய்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாடு "மலைகளையும் பள்ளத்தாக்குகளையும்" கொண்டிருந்தது என்ற உண்மையில் இருந்து, ஆவிக்குரிய சத்தியம் எதையேனும் நாம் நமக்காகத் திரட்ட வேண்டும் என்று கர்த்தர் அர்த்தப்படுத்தினாரா என்பது சந்தேகமாகவே உள்ளது.

இன்னொரு வசனப் பகுதியில் யோசுவாவுக்கு, வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக என்று கூறப்பட்டது (யோசுவா 1:7). வேதாகமத்திற்கு நாம் விளக்கம் அளிக்கையில், நாம் வலது ("தீவிரபழைமை வாதம்") இடது ("தாராளவாதம்") புறம் திரும்பக்கூடாது என்று அறிவிப்பதற்குப் பிரசங்கியார்கள் இவ்வசனப்பகுதியை அடிக்கடி பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் மதிப்புமிக்க பின்வரும் கருத்தை ஏற்படுத்துகின்றனர் என்பதில் சந்தேகம் இல்லை: கிறிஸ்தவர்கள் சட்டவியம் மற்றும் தாராளவியம் என்ற இரு மிகைமுனைகளையும் தவிர்க்க வேண்டும். இருப்பினும், யோசுவா 1ம் அதிகாரம் அந்தக் கருத்தை *விவரிப்பதாக* இருக்கையில் அதை *நிரூபிப்பதாக* இருப்பதில்லை.

நிறைவாக நாம், பேழையில் இருந்த நோவா மற்றும் பிறரைப் பற்றிய விபரத்தைச் சிந்தித்துப் பார்ப்போம் (ஆதியாகமம் 7:23; 1 பேதுரு 3:20). பிரசங்கியார்கள் இந்த வரலாற்றை, சபையைப் பற்றிய போதனைகளை "நிரூபிக்க" பயன்படுத்தியுள்ளனர். அவர்கள், "ஒரே ஒரு பேழை இருந்தது போலவே, பேழைக்குள் இருந்தவர்கள் காக்கப்பட்டது போலவே, இன்றைய நாட்களில் ஒரே ஒரு சபை இருக்கிறது மற்றும் இரட்சிக்கப்பட்டவர்கள் அந்த சபையில் உள்ளனர்" என்று கூறியிருக்கின்றனர். இயேசு ஒரே ஒரு சபையை நிலைநாட்டினார் மற்றும் இரட்சிக்கப்பட்டவர்கள் அந்த சபையில் உள்ளனர் என்பது உண்மையே, *ஆனால் பேழை பற்றிய வரலாறு அந்த உண்மைகளை நிரூபிப்பதில்லை!* ஒரே பேழை இருந்தது என்பதால் அல்ல, ஆனால் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ளதால் அந்த உறுதிப்பாடுகள் உண்மைகளாக இருக்கின்றன. பேழையானது உண்மைகளை விவரிக்கலாம், ஆனால் அது அவற்றை நிரூபிப்பதில்லை.

# முடிவுரை

பழைய ஏற்பாட்டில் உள்ள வரலாற்று எடுத்துரைப்புகள் இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு எவ்விதத்தில் பயனுள்ளவையாக இருக்கின்றன? முதலாவது அவைகள், புதிய ஏற்பாட்டு யுகத்திற்கு வரலாற்றுப் பின்னணியை அளிக்கின்றன. நமது இரட்சிப்பு, யூதராகப் பிறந்த ஒரு மீட்பரைச் சார்ந்துள்ளதால், மற்றும் நாமே ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்களாக இருப்பதால், இஸ்ரவேல் மக்களின் வரலாறு நமது வரலாறாக உள்ளது. இரண்டாவது, பழைய ஏற்பாட்டில் புதிவுசெய்யப்பட்டுள்ள வரலாறு மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றைப் படிக்காமல், புதிய ஏற்பாட்டில் உள்ள நிகழ்வுகள் மற்றும் போதனைகளைப் புரிந்துணர்ந்து கொள்ளுதல் என்பது கடினமானதாக அல்லது சாத்தியமற்றதாக இருக்கும். மூன்றாவது, வேதாகம எழுத்தாளர்கள் தங்கள் போதனைகளை நிரூபிக்க அல்லது விவரிக்க, பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளையும் பாத்திரங்களையும் பயன்படுத்தியுள்ள இடங்களில் நாம், அந்த நிகழ்வுகளையும் பாத்திரங்களையும் அவ்வாறே பயன்படுத்த முடியும். பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் நடுநிலையாகப் பயன்படுத்தப்படும் போது அவைகள், புதிய ஏற்பாட்டுப் போதனைகளை மக்கள் புரிந்துகொள்ள உதவக்கூடும். இருப்பினும், புதிய ஏற்பாட்டு சத்தியங்கள் புதிய ஏற்பாட்டில் இருந்தே வருகின்றன என்பதைப் பிரசங்கியார்களும் போதகர்களும் நினைவில் வைத்திருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு வசனப்பகுதி யொன்று புதிய ஏற்பாட்டு சத்தியத்தை விவரிக்கக் கூடும், ஆனால் அது (பழைய ஏற்பாட்டு வசனப்பகுதி) அதை (புதிய ஏற்பாட்டு சத்தியத்தை) நிரூபிக்க முடியாது.

உருவகமும் உவமையும் நடைமுறைப்பயன்பாட்டில் அபாயகரமானவைகளாக இருக்கலாம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அவைகள், வரலாற்று வசனப்பகுதியை அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் புரிந்துகொள்ள நமக்கு உதவுவது இல்லை. நிகழ்கால விஷயங்களுக்குப் பழைய ஏற்பாட்டு எடுத்துரைப்புகளைத் தொடர்பு படுத்துவதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் வேதவசனங்களைத் திரித்துக்கூறும் குற்றம் உள்ளவர்களாகி விடக்கூடாது (2 பேதுரு 3:16), ஆனால் அவை எந்த அர்த்தம் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ, அந்த அர்த்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

---

குறிப்புகள்

[1]Jack. P. Lewis, *Historical Backgrounds of Bible History* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 94. [2]அஜாக்ஸ் என்ற கிரேக்கப் போர்வீரர், ட்ரோஜன் நாட்டைச் சேர்ந்த ஹெக்டர் என்பவரை ஒரு தனிப்போட்டியில் எதிர்கொண்டார் (Homer *The Iliad* 7). [3]பவுல், பிரமாணத்துடன் கிறிஸ்தவர்களுடைய உறவைப் பற்றிக் கலந்துரையாடியதில், சாராளையும் ஆகாரையும் ஒரு உருவகமாகப் பயன்படுத்தினார் (கலாத்தியர் 4:21-31).